## தினத்தந்தி (03.01.2025)



ஒரத்தை திட்ட நீரேற்று நிலைய மராமத்து பணிக்காக

# புகழூர் காகித ஆலை சார்பில் ரூ.3¾ லட்சம் வழங்கல்

நொய்யல், ஜன.3-

புகழூர் காகித ஆலையின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வளர்ச்சிக்காக, வாய்க்கால் தூர் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் உள்ள ஒரத்தை திட்ட நீரேற்று நிலையத்தை மராமத்துப்பணி செய்யவும், பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்யவும் காகித ஆலை சார்பில் ரூ.3 லட்சத்து 75 ஆயிரத்திற்கான காசோலையை, காகித ஆலைநிறுவனத்தின் பொது மேலாளர் கலைச்செல்வன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித்தலைவர் ரூபா, துணைத்தலைவர் சதீஷ், ஒரத்தை திட்ட நீரேற்று பாசன விவசாய சங்க பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் வழங்கினர். அப்போது காகித ஆலை அதிகாரிகள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**தினமணி (03.01.2025)**

# ஓரத்தை நீரேற்று நிலைய மராமத்து பணிக்கு டிஎன்பிஎல் ரூ. 3.75 லட்சம் நிதியுதவி



புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சித்தலைவர் சி. ரூபா, ஓரத்தை நீரேற்று பாசன சங்க நிர்வாகிகளிடம் ரூ. 3.75 லட்சத்துக்கான காசோலையை வியாழக்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன்.

கரூர், ஜன. 2: டிஎன்பிஎல் ஆலை சார்பில் ஓரத்தை நீரேற்று நிலைய மராமத்துப் பணிக்கு ரூ.3.75 லட்சம் நிதியுதவி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் அமைந்துள்ள ஓரத்தை நீரேற்று பாசனத்திட்டம் மூலம் சுமார் 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 250 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்நிலையில், ஓரத்தை நீரேற்று நிலையம் மராமத்துப்பணி செய்யவும், பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்யவும் காகித நிறுவனத்தின் சமுதாய மேம்பாட்டுத்திட்டம் சார்பில் நீரேற்று பாசன சங்கத்துக்கு ரூ.3.75 லட்சத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் தலைமை வகித்து, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் சி.ரூபா, துணைத் தலைவர் சதீஷ் மற்றும் ஓரத்தை நீரேற்று பாசனத் திட்ட விவசாய சங்க பொறுப்பாளர்களிடம் ரூ.3.75 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார்.

## காலைக்கதிர் (04.01.2025)

# நீரேற்று நிலைய மராமத்து பணிக்கு நீதி வழங்கல்

கரூர், ஜன. 4–

கரூர் மாவட்ட புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில், சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நீரேற்று நிலைய மராமத்து பணிக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமை வகித்தார். நிறுவனம் சார்பில், வாய்க்கால் துார்வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகின்றனர். அதில், புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்.,ல், அமைந்துள்ள ஒரத்தை திட்ட நீரேற்று பாசனம் மூலம், 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது, இத்திட்டத்தின் மூலம், 250 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

ஒரத்தை திட்ட நீரேற்று நிலையத்தை மராமத்து பணி செய்யவும், பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்திட காகித நிறுவனம் சார்பில், புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., தலைவர் ரூபாவிடம் 3.75 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

)ரசு: 64 ஒலி: 216

பக்கங்கள் விலை 600 காசு

THANJAI MALAI MURASU
Reg.No. TRY/060/2024-2026
RNI Regn. No.5842/61

# தஞ்சை மாலை முரசு

திருச்சி பதிப்பு

-1-2025 (மார்கழி 19) வெள்ளிக்கிழமை

★



கரூர் காகித நிறுவனத்தின் சார்பில்

## ரூ 3.75 லட்சத்திற்கான நலத்திட்ட உதவிகள் வழங்கல்

### விவசாய சங்க பொறுப்பாளர்களிடம் வழங்கப்பட்டது

கரூர், ஜன. 3–

கரூர் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்காக வாய்க்கால் தூர்வாருதல், கால்நடை மருத்துவ முகாம், நடத்துதல் ,போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. அந்த வகையில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் அமைந்துள்ள ஒரத்தை திட்ட நீரேற்று பாசனம் மூலம் சுமார் 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. திட்டத்தின் மூலம் சுமார் 250 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றன ஒரத்தை திட்ட நீரேற்று நிலையம் மாறாமத்து பணி செய்யும் பழுதடைந்த மின்மோட்டார்களை சரி செய்திடவு காகித நிறுவனத்தின் சார்பி ரூ 3.75 லட்சத்திற்கா காசோலையை காகித நிறு னத்தின் பொது மேலாள (மனித வளம்) கலைச்செ வன் அவர்கள் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபா, துணைத் தலைவ சதீஷ் மற்றும் ஒரத்தை திட் நீரேற்று பாசன விவசாய சங் பொறுப்பாளர்கள் ஆகியே ரிடம் வழங்கப்பட்டது.

# தினமலர் (05.01.2025)



ஒரத்தை திட்ட நிரேற்று நிலைய மராமத்து பணிக்காக ரூ.3.75 லட்சத்திற்கான காசோலையை புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபா, துணைத் தலைவர் சதீஷ் மற்றும் ஒரத்தை திட்ட நீரேற்று பாசன விவசாய சங்க பொறுப்பாளர்களிடம் காகித ஆலை பொது மேலாளர் கலைச்செல்வன், வழங்கினார்.

## ஒரத்தை திட்ட நீரேற்று நிலைய மராமத்து பணிக்கு ரூ.3.75 லட்சம்

### காகித ஆலை வழங்கல்

**வேலாயுதம்பாளையம், ஜன. 5–**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் ஒரத்தை திட்ட நீரேற்று நிலைய மராமத்து பணிக்காக ரூ.3.75 லட்சம் நிதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வளர்ச்சிக்காக, வாய்க்கால் துார் வாருதல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒரத்தை திட்ட நீரேற்று பாசன சங்கத்திற்கு நிதி வழங்கியுள்ளது. புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் ஒரத்தை திட்ட நீரேற்று பாசனம் அமைந்துள்ளது. இதன் மூலம் 600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இத்திட்டத்தால் 250 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். ஒரத்தை திட்ட நீரேற்று நிலையம் மராமத்து பணி செய்யவும், பழுதடைந்த மின் மோட்டார்களை சரி செய்திடவும் காகித ஆலை நிறுவனம் ரூ.3.75 லட்சம் நிதி வழங்கியது.

அதற்கான காசோலையை புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபா, துணைத்தலைவர் சதீஷ் மற்றும் ஒரத்தை திட்ட நீரேற்று பாசன விவசாய சங்க பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் (மனித வளம்) கலைச் செல்வன் வழங்கினார். காகித ஆலை அதிகாரிகள் உடன் இருந்தனர்.